OS: 180/2020
Date: 05.04.2023

பெயர் : கிருஸ்ணன்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை - 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்</u>

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பானை நீதிமன்றத்தில் இருந்து வரவில்லை. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தார் என்றால் ஜெகன்நாதன் மற்றும் சின்னப்பன் கூட்டி வந்தார்கள். ஜெகன்நாதன் மற்றும் சின்னப்பனை எனக்கு எப்படி தெரியும் என்றால் கடநத் 30 ஆண்டுகளாக ஏர்மாடு ஓட்டிய வகையில் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்துடன் எனது முகவரியை நிரூபணம் செய்வதற்காக ஆதார் அட்டை நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது முதல் விசாரணையில் என்ன தொழில் செய்து வருகிறேன் என சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு தொழில்கள் எதுவும் இல்லை என்றும், நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துவருவதுதான் எனது வேலை என்று சொன்னால் சரியல்ல. நான் குடியிருப்பது ராமணகவுண்டனூர் காட்டுவளவில்தான் இருக்கிறேன் என்றால் அத்திபட்டி, புதூரில் இருக்கிறேன். நான் அத்திபட்டி, புதூரில் குடியிருப்பதாக எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் வெண்ணானம்பட்டியில்தான் குடியிருந்து வருகிறேன் என குறிப்பிட்டுள்ளேன் தவறு என்றால் ஆமாம். நான் வெண்ணானம்பட்டியில் குடி இல்லை என்பது தெரியவந்து விடும் என்பதால்தான் நான் எனது ஆதார் அட்டை நகலை ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் வாதிகளை எவ்வளவு ஆண்டுகளாக எந்த வகையில் தெரியும் என சொல்லவில்லை. எனக்கு இந்த வாதிகளை தெரியாமல் எந்த வகையில் தெரியும் என முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லாமல் தற்போது ஏர்மாடு ஓட்டிய வகையில் தெரியும் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு விவசாய நிலம் எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என குறிப்பிட்டு எனது முதல் விசாணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் பட்டா உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் குடியிருப்பதாக சொல்லகூடிய இடத்திற்கும் வாதிகள் குடியிருக்கும் வெண்ணானம்பட்டிக்கும் இடையே 3 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல 1 ½ கி.மீ தூரம் இருக்கும். வழக்கு நடக்கும் சொத்திற்கும் அருகே எனக்கு விவசாய நிலங்கள் இல்லை என்றால் சரிதான். எனது

முதல் விசாரணையில் தாவா சொத்திற்கு மிக அருகில் எனக்கு விவசாய நிலம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் ஆமாம். வழக்கு விவரங்கள் தெரியும் யார் யார் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சின்னப்பன், ரத்தினம், மினியன், வேலுமணி, ஜெகநாதன் ஆகியோர் தாக்கல் செய்துள்ளார்கள். யாருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என தெரியுமா என்றால் சுவாதீனம் வாதிகளிடம் இருப்பதாக போட்டுள்ளார்கள். வழக்கு சொத்து எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என தெரியுமா என்றால் நான் கேட்கவும் இல்லை, அவர்களும் சொல்லவும் இல்லை. எனக்கு சொத்து எது என்று தெரியாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. வாதிகள் யாரிடம் இருந்து உரிமை கேட்கிறார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதிகள் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக என்ன ஆவணத்தை பாத்துள்ளேன் என்றால் வீட்டுவரி, மிண் கட்டன ரசீதுகள் பார்த்துள்ளேன். வீட்டு வரி பார்த்துள்ளேன் என சொல்வது எந்த மாதிரியான வீட்டிற்கு என்றால் கூரை வீடு. மேற்படி கூரை வீடு யார், எப்போது கட்டினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் சின்னப்பன் கட்டினார். 20 வருடத்திற்கு முன்பு கட்டினார். அடுத்து ரத்தினம் கட்டியுள்ளார் ரத்தினம் வீட்டை கட்டி எவ்வளவு காலம் இருக்கும் என்றால் 15 ஆண்டுகள் இருக்கும். ரத்தினம் கட்டியுள்ள வீடு என்ன வீடு என்றால் அதுவும் கூரை வீடு. சின்னப்பன் மற்றும் ரத்தினம் கட்டியுள்ள வீடுகள் எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில்தான் மேற்படி சின்னப்பன் மற்றும் ரத்தினத்தின் வீடுகள் உள்ளதா என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரனம் உள்ளது என்றால் சுமார் 3 ஏக்கர் உள்ளது. வழக்கு சொத்திற்கு நான்குபுறமும் யார் யார் நிலம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. உண்மையில் நான் இந்த தாவா சொத்தை உலவடை செய்திருந்தாலோ அந்த தாவா சொத்திற்கு சென்றிருந்தாலோ சொத்தின் நான்கு பக்க எல்லைகள் தெரிந்திருக்கும் என்றும், அவ்வாறு தெரியாது என்பதிலிருந்து எனக்கு தாவா சொத்தை பற்றி தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ரத்தினம் மற்றும் சின்னப்பன் கட்டிய வீடுகளுக்கு மிண்சார இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மிண்சார இணைப்பு வாங்கி எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 10, 12 ஆண்டுகள் இருக்கும். வழக்கு சொத்து அல்லாமல் வாதிகளுக்கு பக்கத்தில் வேறு

நிலங்கள் உள்ளது. அந்த நிலங்கள் வாதிகளுக்கு எப்படி பாத்தியம் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சின்னப்பன், ரத்தினம் இவர்களின் தந்தை பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சின்னப்பன், ரத்தினத்தின் தந்தையுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அவர்கள் வாரிசுகளும் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என குறிப்பிட்டுள்ளேன் அவர்கள் யார் என தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சேவி, அவரது தாயார் குப்பாயம்மாள் என முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் அது நான் சொல்லவில்லை. முதல் விசாரணை தாக்கல் செய்தபோது படித்து பார்த்து விவரம் தெரிந்து கொள்ளாமல் தாக்கல் செய்துள்ளேன். சமயா என்பவரை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவாசொத்தை ஒருவர் விலைக்கு வாங்கியதாக கூறி வாதிகளிடம் தகராறு செய்து கொண்டிருந்ததாக குறிப்பிட்டுள்ள சங்கதியில் மாதம், தேதி, வருடம் ஏதேனும் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தகராறு செய்த சமயத்தில் வாதிகள் ஏதேனும் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் வாதிகள் தாவாசொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும், நான் சொல்வதுபோல் சம்பவமே நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த ஆண்டிலிருந்து வாதிகள் சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள் என முதல் விசாரணையில் சொல்லவில்லை. எனக்கு வழக்கு சங்கதிகள் பற்றி எதுவும் தெரியாது என்றும், வாதிகளுக்கு யாரும் உள்ளூர்காரர்கள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், 1, 2 வாதிகளின் நண்பர் என்ற முறையில் அவர்கள் கேட்டுக்கொண்டதால் தயார் செய்துகொடுத்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்க்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

ஒப்பம்/-PW2
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.